# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,749 — 1959 මැයි 25 වැනි සඳුදා — 25.5.1959**

**11,749 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 25 ந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை—BT 65. **சீனி**

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 12(1) (b) ம் பிரிவினாலும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), ஜோசப் வலன்டைன் பொன்சேகா ஆகிய நான், இக்கட்டளையால்—

(1) 1956 ம் ஆண்டு வைகாசி மாதம் 11 ந் திகதி BT 34 என இலக்கம் இடப்பட்டு 10,930 ம் இலக்கம் கொண்ட 56 ம் ஆண்டு வைகாசி மாதம் 18 ந் திகதி வெளிவந்த இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளையை இன்று தொடக்கம் நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே ஒரு அந்தருக்குரிய ஆகக் கூடிய மொத்த விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் இந்த விலைக்குமேல் விற்கப்படாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) சீனி 1 அந்தர் அல்லது அதற்கூடிய தொகையில் ஒரு தடவை விற்றல் மொத்த விலை விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) " சீனி " எவ்வித கருப்பெட்டி கலப்பில்லாதிருத்தல் வேண்டும்.

(4) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் எவராவது சீனியை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது சீனி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளை காட்டும் அறிவித்தல் ஒன்றை சீனி இருக்குமிடத்தில் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல்வேண்டும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மொத்தமாக சீனி விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற சீனிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா என்று.

1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 15 ந் தேதி மட்டக்களப்புக் கச்சேரியில் மாலை 3 மணிக்குக் கையொப்பம் இடப்பட்டது.

ஜோ. வ. பொன்சேகா,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மட்டக்களப்பு மாவட்டம்.

**அட்டவணை**

சுத்தமாக்கப்படாத சிவப்புச் சீனி
சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச் சீனி

| 1 ம் பத்தி<br>எல்லைகள் | 2 ம் பத்தி<br>மொத்த அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை சுத்தமாக்கப்படாத சிவப்புச் சீனி<br>ரூ. ச. | 3 ம் பத்தி<br>மொத்த அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச் சீனி<br>ரூ. ச. |
|---|---|---|
| (1) மட்டக்களப்பு—மண்முனை வட பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு | 61 25 | 68 23 |
| (2) எருவூர், வாழைச்சேனைப் பிரிவுக் காரியாதிகாரிகளின் பிரிவுகள் | 61 25 | 68 23 |
| (3) மண்முனை தெற்கும் எருவில் போரதீவுக் காரியாதிகாரியின் பிரிவில் | 61 25 | 68 23 |
| (4) கரவாகுப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் | 61 68 | 68 68 |
| (5) சம்மாந்துறை, வேவகம்பற்று, அம்பாரை, பரகாகல காரியாதிகாரிகளின் பிரிவுகளில் | 62 90 | 69 00 |
| (6) அக்கரைப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் | 61 50 | 69 50 |
| (7) பாணமைப் பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் | 61 50 | 69 50 |
| (8) பித்தனைப்பற்று—மகா ஓயா, சேரங்கடை, படியத்தலாவை—காரியாதிகாரியின் பிரிவில் | 62 43 | 69 63 |

## 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### நிறை முறையில் அரிசி விற்பனை

1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் " ஈ " தலையங்கத்தின் II ம் பாகத்தின் 5 ம் பிரமாணத்தினதும் III ம் பாகத்தின் 4 (1)ம் பிரமாணத்தினதும் பிரகாரம் 1959 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி தொடக்கம் இதனோடிருக்கும் அட்டவணையின் I ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள வகுப்பைச் சேர்ந்த அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை உடையவரும் மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பரிபாலன மாவட்டங்கள் ஒன்றில் வசிப்பவருமான ஒருவருக்கு அவ்வகுப்புக்கான வாராந்தப் பங்கீட்டரிசி அட்டவணையின் II ம் பத்தியில் அவ்வொருவருக்கு நேராகக் காணப்படும் தொகையே இருத்தல் முறையில் விற்கப்படும் அல்லது வழங்கப்படும் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அட்டவணை

| பத்தி I<br>வகுப்பு | பத்தி II<br>அரிசி<br>(இருத்தல்கள்) |
|---|---|
| குழந்தை .. .. .. | 4 |
| பிள்ளை .. .. .. | 4 |
| சாதாரணம் .. .. .. | 4 |
| வேலையாள் .. .. .. | 4 |

**குறிப்பு.**—ஒரு கொத்து அரிசி 2 இருத்தலுக்குச் சமமானது. இவ்விகிதப்படி பாவனையாளர் கூப்பன் கொடுப்பதன் பேரில் ஒரு வாரத்திற்கு ஒரு அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்திற்கு இரண்டு கொத்திற்குப் பதில் நாலு இருத்தல் அரிசி பெறுவர்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும் உணவு அதிகாரியும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது